# தல வரலாற்றுப் பெருமைகள்

ஆலயம் என்றால் ஆன்மா லயிக்கின்ற இடம் என்று பொருள். அப்படி நமது இதயங்களை இறைவனோடு ஐக்கியப்படுத்தும் அரிய முயற்சியாக உலா வரும் உங்கள் ஸ்ரீசங்கரா தொலைக்காட்சியின் **"தேவதா தர்ஷன்"** ' நிகழ்ச்சியில் தமிழகம் கர்நாடகா உள்ளிட்ட மாநிலங்களில் உள்ள ஆலயங்கள், அவற்றின் தல வரலாற்றுப் பெருமைகள், அந்த ஆலயத்தில் அமைந்துள்ள சன்னதிகள் மற்றும் திருவிழா விபரங்கள் யாவும் விளக்கமாக விவரிக்கப்படுகின்றன. இந்நிகழ்ச்சி தினந்தோறும் காலை 11.30மணி முதல் 12.00 மணி வரை ஒளிபரப்பாகிவருகிறது.

ஆலயத்திற்கு சென்று ஆண்டவனை வழிபட்ட ஒரு புதிய அனுபவத்தை தொலைக்காட்சி மூலமாக நமக்கு வழங்கும் இந்நிகழ்ச்சியில் சைவ-வைனவ திருத்தலங்கள் மட்டுமின்றி கிராம தேவதைகளின் ஆலயங்கள் குறித்த அரிய தகவல்களும் இடம் பெறுகின்றன.

காட்சிகளுடன் கருத்தை கவரும் வகையில் எந்தெந்த ஆலயங்களுக்கு என்னென்ன பரிகாரம், வழிபாட்டு முறைகள், சென்று வருவதற்கான வழிகாட்டு முறைகள் என பல்வேறு அம்சங்கள் படம்பிடிக்கப்பட்டு ஒளிபரப்பாகும் இந்நிகழ்ச்சியில் காண்போரின் நெஞ்சம் உருகும் வகையிலான அற்புதமான பாடல்கள் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது.

# யோகம்... ராஜயோகம்...!

உங்கள் ஸ்ரீசங்கரா தொலைக்காட்சியில் திங்கள் முதல் வெள்ளிவரை தினந்தோறும் இரவு 10.30மணி முதல் 11.00 மணி வரை ஒளிபரப்பாகிவரும் உபயோகமான நிகழ்ச்சி **“ராஜயோகம்”.**

முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்ற பொன்மொழியின் படி அமையப் பெற்றதுதான் மனித வாழ்க்கை. இப்பிறப்பில் நம்மால் முடிந்த நல்லவற்றை இயலாதோர்க்கும், இல்லாதோர்க்கும் செய்தால் இப்புண்ணியம் தொடரும் பிறப்புகளில் நம்மை நற்கதி அடையவைக்கும் என்பது சாஸ்திரங்கள் சொல்லும் உண்மை.

அதன் அடிப்படையில் வடிவமைக்கப்பட்ட இந்நிகழ்ச்சியில் பிரபல ஜோதிட நிபுணர் முனைவர் கே.ராம் அவர்கள் கலந்துகொண்டு தொலைபேசி மூலம் நேயர்கள் தங்களது இன்றைய காலம் குறித்தும் எதிர்காலம் குறித்தும் எழுப்பும் பல தரப்பட்ட கேள்விகளுக்கு பக்குவமாய் பதிலளிக்கிறார்.

இதுமட்டுமின்றி ஒவ்வொரு நாளும் நிகழ்ச்சியில் பல அரிய ஆன்மீக தகவல்களையும் பாதிக்கப்பட்டோர் பயன்பெற எளிதான பரிகார முறைகளையும் விளக்குவது இந்நிகழ்ச்சியின் சிறப்பு. இதேபோல் அனைவரும் ஆலயத்திற்கு செல்லவேண்டும் என்றும் தினசரி இறைவனை வணங்கி நற்காரியங்களில் ஈடுபடவேண்டும் என்றும் முனைவர் கே.ராம் அவர்கள் வழங்கும் அறிவுரைகளை பின்பற்றினால் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு நாளும் ராஜயோகமே என்பதில் ஐயமில்லை.